*798 வினா—திரு. எம் முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கோவில்பட்டி தாலுகா, கட்டாலங்குளம் கிராமத்திலுள்ள அரிசனப் பொது மக்கள் வீட்டுமனைப் பட்டா கோரி, 9—5—1970-ல் மனுச் செய்துள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில்அரசு என்னநடவடிக்கைஎடுத்துள்ளது?

மாண்புமிகுதிரு சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) ஐம்பத்துமூன்று வீடில்லா ஏழை அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்கத் தேவையான 4·58 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய, கோவில்பட்டி தனித் தாசில்தார், மேல் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. எம். முத்தையா : இந்த நடவடிக்கையை ஓராண்டுக் காலமாக எடுத்துக் கொண்டு வருவதாகத் தாசில்தார் சொல்லிக் கொண்டிருக்கிறார். அந்த நடவடிக்கை எப்போது முடியும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தாமதத்திற்குக் காரணம் அந்த இடம் ஒரே இடமாக இல்லாமல் ஐந்து துண்டுகளாகப் பரவலாக இருப்பதுதான். நான்கு ஏக்கர் ஒரே பிளாக்காக கிடைக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கிடைக்கவில்லை என்றால் இந்த இடத்திலேயே கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மக்களிடத்தில் நல்லமுறையில் பிரசாரம்செய்வார்களானால் நல்லமுறையில் அந்த இடத்தை எடுக்கமுடியும்

அரிசன மாணவர்களுக்கு படிப்பு உதவிப் பணம்

*799 வினா :—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை அண்மையில் அதிகரிக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 1971–72-ஆம் கல்வி ஆண்டு முதல் உணவு, உறைவிடத்திற்கான உதவித் தொகை கீழ்க்கண்டவாறு உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது :—

படிப்பு.	சென்னை மாநகர் பழைய வீதம்.	சென்னை மாநகர் உயர்த்தப்பட்ட வீதம்.	வெளியூர்ப் புறம். பழைய வீதம்.	வெளியூர்ப் புறம். உயர்த்தப்பட்ட வீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)
	(மாதம் ஒன்றுக்கான ரூபாய்).			
கலை விஞ்ஞானம் மற்றும் சட்டக்கல்வி.	60	70	50	55
மருத்துவம், பொறியியல் ..	70	75	70	70
உழவியல்	..	..	50	70

படிப்பு	சென்னை மாநகர் பழைய வீதம்	சென்னை மாநகர் உயர்த்தப் பட்டவீதம்	வெளியூர்புறம் பழைய வீதம்	வெளியூர்புறம் உயர்த்தப் பட்ட வீதம்
(1)	(2)	(3)	(4)	(5)
கால்நடை மருத்துவம் ..	60	75	50	70
எல். சி. இ. எல். எம். இ. போன்ற டிப்ளமோ படிப்பு.	50	60	45	50
ஆசிரியர் பள்ளி பயிற்சிப் படிப்பு.	20	40	25	45

இதேபோல் 1971–72-ம் ஆண்டிற்கு சிறப்புக் கட்டண உதவித் தொகையை மத்திய அரசு வழங்கும் சிறப்புக் கட்டண உதவித் தொகை யின் அளவிற்கு உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது.

திரு. தொ. ப. சீனிவாசன்: தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவித் தொகை அளித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன் ஞர்கள். சமுதாயத்தில் மிக மிகப் பின்தங்கிய மக்களுக்கு இந்தச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தாழ்த்தப்பட்ட மக்களுக் காக மத்திய அரசு சில உதவிகளைத் தருகிறது. அதை வைத்துக் கொண்டு மாநில அரசு கூடச் சேர்த்து இந்தத் தொகையை அதிகமாகக் கொடுக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம்: சர்க்காரிடமிருந்து செல்லுகின்ற உதவித் தொகை கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் ஒருமாதம், இரண்டுமாதம் பாங்கில் போட்டு வைத்துக் கொண்டு பிறகு தான் மாணவர்களிடத்தில் கொடுக் கிருர்கள் என்ற புகார் வருகிறது. அதைப்பற்றி பரிசீலனை செய்து ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நலத்துறையிலிருந்து செக்குகளை அனுப்புவதில் தாமதம் இல்லை. அந்தந்தக் கல்லூரிகள் பள்ளிகளுக்குச் செக் அனுப்பப்பட்டு மாணவர்களுக்குக் கொடுப்பதிலே தாமதம் இருப்பதாக அறிந்து இப்போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அதிகாரி போடப்பட்டு அவ்வப்போது மாணவர்களுக்கு அந்தத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டி ருக்கிறது. இனிமேல் அத்தகைய தாமதம் ஏற்படாது. இதைப் பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சரிடத்திலும் சொல்லியிருக்கிறேம். அவர்களும் எல்லாப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் சர்குலர் அனுப் புவதாக ஒத்துக் கொண்டிருக்கிருர்கள்.

திரு. கே. என். குமாரசாமி: சென்னை நகரம், வெளியூர் என்ற வகையிலே உதவித் தொகை வித்தியாசப்படுகிறது. எந்த இடமாக இருந்தாலும் ஒரே தொகை வழங்க அரசாங்கம் முன்வருமா ?